# ஜனவரி – 06 – சனி

### புனித ஆந்திரே பெசெற்

### “ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்” (மாற்.1:3)

---

## முதல் வாசகம் : 1 யோவான் 5 : 5 - 13

என் அன்பார்ந்த பிள்ளைகளே, இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்?. நீராலும் இரத்தத்தாலும் வந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் நீரால் மட்டும் அல்ல. நீராலும் இரத்தத்தாலும் வந்தவரென தூய ஆவியார் சான்று பகர்கிறார். தூய ஆவியாரே உண்மை. எனவே சான்று அளிப்பவை மூன்று இருக்கின்றன. தூய ஆவியும் நீரும் இரத்தமுமே அவை. இம்மூன்றும் ஒரே நோக்கம் கொண்டவை. மனிதர் தரும் சான்றை நாம் ஏற்றுக்கொள்கிறோமே! கடவுள் தரும் சான்று அதை விட மேலானது அன்றோ! கடவுள் தம் மகனுக்குச் சான்று பகர்ந்துள்ளார். இறைமகன்மீது நம்பிக்கை கொண்டுள்ளோர் இச்சான்றைத் தம்முள் கொண்டிருக்கின்றனர். ஆனால், கடவுள்மீது நம்பிக்கை கொள்ளாதோர் அவரைப் பொய்யராக்குகின்றனர். ஏனெனில் தம் மகனைக் குறித்து அவர் அளித்த சான்றை அவர்கள் நம்பவில்லை. கடவுள் நமக்கு நிலை வாழ்வை அளித்துள்ளார். இந்த வாழ்வு அவர் மகனிடம் இருக்கிறது. இதுவே அச்சான்று. இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக் கொண்டுள்ளனர் அவரைக் கொண்டிராதோர் வாழ்வைக் கொண்டிரார். இறைமகனிடம் நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு நிலைவாழ்வு உண்டு என நீங்கள் அறிந்து கொள்ளுமாறு உங்களுக்கு இவற்றை எழுதுகிறேன்.

**பதில்பாடல் :** எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக.

## நற்செய்தி : மாற்கு 1 : 7 – 11

அவர் தொடர்ந்து, ”என்னைவிட வலிமை மிக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூட எனக்குத் தகுதியில்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன் அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்” எனப் பறைசாற்றினார். அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடு வதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, ”என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

**தியானம்:** “உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கின்றது என்று யோவான் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். இந்த தீயோனின் பிடியில் உள்ள இந்த உலகை நாம் ஜெயிக்க வேண்டுமென்றால் நாம் கடவுளிடமிருந்து பிறக்க வேண்டும் என்று இன்றைய முதல் வாசகத்தின் வழியாக யோவான் நமக்குக் கற்றுத்தருகின்றார். கடவுளிடமிருந்து வந்த இயேசுவே இறைமகன் என்று நம்புகின்றவர்கள் தேவனில் மீண்டும் பிறக்கின்றார்கள். அப்படிப் பிறப்பவர்களை தேவன் பாதுகாக்கின்றார் என்ற சத்தியத்தை யோவான் நமக்குத் தெரியப்படுத்துகின்றார். உலகத்தின் பிரச்சனைகளை, சோதனைகளை, வேதனைகளை, துன்பங்களை நாம் வெற்றிகொள்ள வேண்டுமென்றால் சிலுவையில் அலகையை வெற்றி கொண்ட இயேசுவை நாம் முழுமையாக நம்பி அவரிடம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவ்வாறு அர்ப்பணிக்கின்றபோது இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் வாசிப்பது போல நமக்காக வானம் திறந்திருப்பதை நம்மால் காணமுடியும். நம்முடைய உலகப்போராட்டங்களை நம்முடைய சக்தியினால், புத்தியினால் எதிர்கொள்ள முடியாது. மாறாக விண்ணகம் நமக்குத் தருகின்ற ஆற்றலால், தூய ஆவியின் வல்லமையால் வென்றெடுக்க முடியும் என்ற உண்மையை இயேசு நமக்குக் கற்றுத்தருகின்றார். எவனொருவன் தன்னுடைய சிந்தனையை மேல் நோக்கிப் பார்க்க கற்றுக்கொள்கின்றானோ அவனே இந்த உலகத்தின் சவால்களை மேற்கொள்ள தயாராக இருக்கிறான். விண்ணகம் தரும் ஆற்றலால், தைரியத்தால், சக்தியால் இந்த உலகத்தின் காரியங்களை நம்மால் வெல்ல முடியும். நான் இயேசுவின் அன்புக்குழந்தை, நான் இயேசுவுக்குச் சொந்தம் என்று யார் ஒருவர் தேவனில் தன்னுடைய அடையாளத்தை வைத்து தன்னுடைய பதவி, சமூக அந்தஸ்து, படிப்பு, திறமை, பொருளாதாரம், சாதி இவற்றினால் நமக்குள் எழும் ‘நான்’ என்ற அகந்தை என்று போலியாக சாத்தானால் உருவாக்கப்பட்ட அடையாளங்களை உடைத்தெறிகிறோமோ நாமும் கடவுளில் பிறந்தவர்களாக, கடவுளுக்குச் சொந்தமானவர்களாக மாறுவோம். கடவுளில் பிறந்தவர்களை கடவுளே பாதுகாக்கின்றார். அலகை அவர்களைத் தீண்டாது. (1யோவா.5:18) நாமும் சாத்தானை முறியடித்த இயேசுவின் பிள்ளைகளாக வாழ்வோம்.